## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பலாங்கொடை ஸ்ரீ சுதர்சன விகார வர்த்தன சங்க (கூட்டிணைத்தற்) சட்டம்

---

(1981, மார்ச்சு மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1981, ஏப்பிறல் மாதம் 03 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 50

## 1981 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பலாங்கொடை ஸ்ரீ சுதர்சன விகார வர்த்தன சங்க (கூட்டிணைத்தற்) சட்டம்

[1981, மார்ச்சு மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 32/80
1420

### பலாங்கொடை ஸ்ரீ சுதர்சன விகார வர்த்தன சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

"பலாங்கொடை ஸ்ரீ சுதர்சன விகார வர்த்தன சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்தினோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டு நடாத்துவதற்குமென இதன்முன்னர் பலாங்கொடையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்: முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட சங்கம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பலாங்கொடை ஸ்ரீ சுதர்சன விகார வர்த்தன சங்க (கூட்டிணைத்தற்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பலாங்கொடை ஸ்ரீ சுதர்சன விகார வர்த்தன சங்கத்தின் இப்போதுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனையாட்களும் "பலாங்கொடை ஸ்ரீ சுதர்சன விகார வர்த்தன சங்கம்" என்ற பெயரின் கீழும் (அது இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்), மருடத்தின் கீழும் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும். அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், வழக்குத் தொடுத்தலும் வேண்டும். அதற்கெதிராகவும் வழக்குத் தொடுக்கப்படலாம் என்பதுடன், தொடுக்கப்படலும் வேண்டும். அத்துடன் ஒரு பொது இலச்சினையை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். பலாங்கொடை ஸ்ரீ சுதர்சன விகார வர்த்தன சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படும் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) பரியத்தி, பரியாப்தி, பரிவேதம் ஆகிய பௌத்த மூக்கோட்பாடுகளைக் கற்றலும், அது தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கு ஊக்கமளிப்பதற்குமாக, பலாங்கொடை ஸ்ரீ சுதர்சன மகா

விகாரையை நடைமுறைப்படுத்தலும், அதைக் கொண்டு நடாத்தலும் ;

(ஆ) பலாங்கொடை ஸ்ரீ சுதர்சன மகா விகாரையையும் அதனோடு தொடர்புபட்ட நிறுவனங்களையும் முன்னேற்றுதல் ; அத்துடன்

(இ) உறுப்பினர்களதும், பொதுமக்களதும் சமூக, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தேவையான கட்டிடங்கள், பொருட்களைப் பெற்றுக்கொடுத்தலும், அவைகளைக் கொண்டு நடாத்தலும்.

**முகாமைச் சபை.** 4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலுள்ளனவான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படும் ஆட்களைக் கொண்டமைந்த முகாமைச் சபையினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும் :

(அ) பலாங்கொடை ஸ்ரீ சுதர்சன மகா விகாராதிபதி, பதவிவழித் தலைவர் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படும் இரு உப தலைவர்கள், பொதுச் செயலாளர், பொருளாளர், அமைப்பாளர் ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் அத்தகைய விதிகளுக்கிணங்க, கூட்டுத்தாபனத்தின் விதிகளில் விதந்துரைக்கப்படக்கூடியவாறான மற்றும் உறுப்பினர்கள்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை இச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவிவகிக்கும் சங்கத்தின் முகாமைச் சபையின் உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் விதிகள்.** 5. (1) உறுப்பினரின் ஆண்டுப் பொதுக் கூட்டம் ஒன்றிலும், சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரின் மூன்றில் இரண்டு பங்கினரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல், அல்லது அவர்களை நீக்குதல் என்பவற்றுக்காகவும், முகாமைச் சபையினதும், கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், அதன் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும் என்பவற்றுக்காகவும் கூட்டுத்தாபனம் காலத்துக்குக் காலம் விதிகளை ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாகும்.

(2) அப்போதைக்கு வலுவுள்ளதாயிருக்கும் விதியெதுவும் அல்லது இதன் பின்னர் நிறைவேற்றப்படக்கூடிய எவ்விதியும், கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டமொன்றில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்

பினரின் மூன்றில் இரண்டு பங்கினரின் பெரும்பான்மை வாக்குகள் கொண்டன்றி மாற்றப்படலாகாது, திருத்தப்படலாகாது, நீக்கப்படலாகாது அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாகாது :

ஆயின், எவ்வாருயினும், அத்தகைய மாற்றம், சேர்க்கை, திருத்தம் அல்லது நீக்கம் எதுவும் முகாமைச் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய பயனுறுதல் ஆகாது.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் வலுவிலுள்ளவையான சங்கத்தின் விதிகள் இப்பிரிவின் கீழாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் யாவரும் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

6. விலைக்கு கொள்வனவு, கொடை, நன்கொடை, இறுதிவிருப்பாவணக்கைமரிப்பு என்பனவகையில் அல்லது வேறு வகையாக அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதையேனும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியுமுடையதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கு அமையவும், விற்க, ஈடுவைக்க, குத்தகை கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும். — கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.

7. (1) வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், நடாத்திவரவும், முடிவுறுத்தவும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாது பணங்களைக் கடனாகப் பெறவும், திரட்டவும், கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலமர்த்தவும், ஈடுபடுத்தவும், வேலை நீக்கவும் உள்ள தத்துவம் உட்படக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்குத் தேவையான அல்லது விரும்பத்தக்க அத்தகைய செயல்கள், காரியங்கள், கருமங்கள் ஆகிய யாவற்றையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவம் உடையதாதல் வேண்டும். — கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்

(2) ஆறும் பிரிவினாலும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினாலும் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் முகாமைச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

8. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று சங்கத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும்; சங்கத்துக்குச் சேர்மதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படவுள்ள ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்கெனக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். — சங்கத்தினால் செலுத்தப்படவுள்ள கடன்களும் சங்கத்துக்குச் செலுத்தப்படவுள்ள கடன்களும்.

கூட்டுத் தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்பட வேண்டு மென்பது.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைச்சபையின் எவரேனும் இரு உறுப்பினரது முன்னிலையிலல்லாமல் எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது; அவர்கள் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக அச் சாதனத்தில் அவர்களது பெயர்களைக் கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சிக்காரராக இடும் கையொப்பத்தினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணல்.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் குழுவினது அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30, (வெளிநாடு) ரூபா 40; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.